ஜெயங்கொண்டம் நகராட்சி ஆணையாளர் அவர்களது செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : ர. அசோக்குமார்

ந.க.எண் : 1213/ 2020 /அ4 **நாள் : 23.02.2024**

பொருள் : மனைப்பிரிவு – ஜெயங்கொண்டம் நகராட்சி – அரியலூர் மாவட்டம் – உடையார்பாளையம் வட்டம் – ஜெயங்கொண்டம் நகரம் ஜெயங்கொண்ட சோழபுரம் கிராமம் நகரளவு எண்கள். 428/1,2, 3 Pt , 427/1ல் 1 ஏக்கர் 84 சென்ட் இடத்திற்கு மனைப்பிரிவு அனுமதி மற்றும் வரைபடம் அங்கீகரிக்கப்பட்டது – ம.வ/ந.ஊ.உ.இ (அ.மா) எண். 14/2022 ன்படி குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் அளித்து உத்தரவு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அரியலூர் அவர்களின் உத்தரவு ந.க.எண். ந.க.எண். 204 /2020 /அ.மா. நாள்.01.02.2024.
2. இந்நகராட்சி நகரமன்ற தீர்மான எண். 220 நாள்.07.02 .2024
3. திரு.எஸ். ஜாகிர்உசேன் மற்றும் இருவர் அவர்களின் மனைப்பிரிவு விண்ணப்பம் நாள்: 10.06.2020, 17.06.2020, 18.06.2020, 29.01.2024.

உத்தரவு :

பார்வை 1–ல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அரியலூர் அவர்களின் உத்தரவில் ஜெயங்கொண்டம் நகராட்சிக்குட்பட்ட ஜெயங்கொண்ட சோழபுரம் கிராமம் நகரளவு எண். 428/1,2, 3Pt, 427/1 ல் 1 ஏக்கர் 84 சென்ட் இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ந.க.எண்.204 /2020 /அ.மா. நாள்.01.02.2024 ம் தேதிய உத்தரவில் மனைப்பிரிவு மற்றும் வரைப்படத்திற்கும் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் (அ.மா) எண். 1/2024 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மனுதாரரால் வரைப்படத்தின் படி சாலை மற்றும் பொது உபயோக இடங்கள் நகராட்சிக்கு நகர் ஊரமைப்பு துறை வழிகாட்டுதலின்படி தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி பொறியாளரின் 18.12.2023ம் தேதிய குறிப்பின் படி மனைப்பிரிவில் மனைப்பிரிவு உரிமையாளரின் சொந்த பொறுப்பில் தார் சாலைகள், குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது. நகராட்சி பொறியாளரின் சான்று பெறப்பட்டுள்ளது. தெருவிளக்கு வசதிக்காக தமிழ்நாடு மின் வாரிய மதிப்பீட்டின் படி மின் வாரிய அலுவலகத்தில் மதிப்பீட்டு தொகை ரூ. 68,350/ செலுத்தப்பட்டுள்ளது. மனைப்பிரிவு அனுமதி தொடர்பாக கீழ் கண்டவாறு கட்டணங்கள் வசூலிக்கப்பட்டுள்ளது.

1. நகர் ஊரமைப்பு துறை உத்தரவு படி நிலப்பயன்பாடு மாற்றம் கட்டணமாக ரூ. 55,890 /–ம் அரசு கருவூலத்தில் (செலுத்து சீட்டு எண். 20240213002562 நாள். 13.02.2024) நகர் ஊரமைப்பு துறை கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.
2. கூராய்வு கட்டணமாக மனை ஒன்றுக்கு ரூ 1000/– வீதம் ரூ. 27,000/ ம் நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. (செலுத்து சீட்டு எண். 0016626 நாள். 14.02.2024)
3. சாலை பராமரிப்புக்காக திரும்ப செலுத்தக்கூடிய முன் வைப்புத்தொகை ரூ. 1,85,000/– ம் நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. (செலுத்து சீட்டு எண்.0016625 நாள். 14.02.2024)

எனவே, பார்வை 2ல் கண்ட இந்நகராட்சி நகர்மன்ற தீர்மனத்தில் அனுமதித்து உள்ளவாறு மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அரியலூர் அவர்களின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் படி செயல்பட வேண்டும் என தெரிவித்து மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

ஆணையாளர்,
ஜெயங்கொண்டம் நகராட்சி.

இணைப்பு :

1. மனைப்பிரிவு வரைபடம்–1
2. மனைப்பிரிவு நிபந்தனைகள்–1

பெறுதல் :

திரு. எஸ். ஜாகிர் உசேன் மற்றும் இருவர்,
ஜீப்ளி ரோடு,
ஜெயங்கொண்டம்.

நகல் :

1. சார் பதிவாளர், ஜெயங்கொண்டம்.
2. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அரியலூர் மாவட்டம்
3. உதவி மின் பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், ஜெயங்கொண்டம் (மனைப்பிரிவின் உள்ளே மின் கம்பங்கள் அமைத்து மின்வசதி ஏற்படுத்திட)
4. நகராட்சி பொறியாளர் சாலை பதிவேட்டில் பதிவு செய்து தொடர் பராமரிப்பு செய்திட.
5. கணினி அமைப்பாளர் (சொத்து பதிவேட்டில் கணினி பதிவு செய்திட தான பத்திர நகலுடன்).
6. வருவாய் ஆய்வாளர், ஜெயங்கொண்டம் நகராட்சி காலிமனைவரி விதிக்க.
7. வட்டாட்சியர், நில அளவைப் பிரிவு, ஜெயங்கொண்டம் அவர்களின் நடவடிக்கைக்கு.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

அனுப்புதல் :	பெறுதல் :
திரு. ர. அசோக்குமார்., ஆணையர், ஜெயங்கொண்டம் நகராட்சி, அரியலூர் மாவட்டம்.	உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், 34B17/A2 மேல அக்ரஹார தெரு, அரியலூர் – 621704.

ந.க.எண்.1213 /2020 /எப்1 நாள். 22.01.2024

அய்யா,

பொருள் : மனைப்பிரிவு – நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் – அரியலூர் மாவட்டம் – உடையார்பாளையம் வட்டம் – ஜெயங்கொண்டம் நகராட்சி ஜெயங்கொண்டம் சோழபுரம் – கிராமம் சர்வே எண். 428/1, 2, 3PT, 427/1 1 ஏக்கர் 84 சென்ட் பரப்பளவு கொண்ட இடத்தில் – திரு. ஜாகிர் உசேன் மற்றும் இருவர் குடியிருப்புக்கான மனைப்பிரிவு அனுமதி சாலை அமைப்பு வரைபடத்தின் படி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் தானபத்திரம் மூலம் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டது தகவல் தெரிவித்தல் மற்றும் இறுதி ஒப்புதல் வழங்க தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை : 1. உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை, அரியலூர் அவர்களின் கடித ந.க.எண். 350/2020 பெ.ம. நாள். 18.06.2020.
2. தான பத்திர பதிவு எண். 2205 நாள். 21.07.2023.

-- Oo0o—

பார்வையில் காணும் உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை அரியலூர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க உத்தேச மனைப்பிரிவிற்கான சாலை அமைப்பு வரைபடத்தின்படி சாலை மற்றும் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு பொது ஒதுக்கீடுகள் தானபத்திரம் மூலம் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே, மனைப்பிரிவை அங்கீகரித்து இறுதி தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஆணையர்,
ஜெயங்கொண்டம் நகராட்சி.

இணைப்பு: தானப்பத்திரம் நகல் மற்றும் சாலை ஒப்படைப்பு புகைப்படங்கள்.

நகல்:
திரு. ஜாகிர் உசேன் மற்றும் இருவர்,
73, பூக்கார தெரு,
அரியலூர்.